# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதுபெரும் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களின் மறைவுக்கு அனுதாபங்கள்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதுபெரும் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களின் மறைவுக்கு இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

2. எக்ஸ் தள பதிவொன்றில் பிரதமர் தெரிவித்திருப்பதாவது; "தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதுபெரும் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். அவருடனான சந்திப்புகளின் இனிமையான நினைவுகளை என்றென்றும் போற்றுவேன். இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு சமாதானம், பாதுகாப்பு, சமத்துவம், நீதி, கௌரவம் நிறைந்த வாழ்க்கையை ஏற்படுத்த அவர் அயராது பாடுபட்டார். இலங்கையிலும், இந்தியாவிலும் உள்ள அவரது நண்பர்கள் மற்றும் அபிமானிகளுக்கு அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது."

3. இதேபோல, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி எஸ்,ஜெய்சங்கர் அவர்களும் தனது இரங்கல்களைத் தெரிவித்துள்ளார். "இலங்கை தமிழ் தலைவர் திரு.இரா.சம்பந்தன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைந்தேன். பல தசாப்தகாலமாக எனக்கும் அவருக்கும் இடையில் நடைபெற்ற பல்வேறு சந்திப்புகள் மற்றும் உரையாடல்களை இச்சந்தர்ப்பத்தில் நினைவில்கொள்கின்றேன். இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் சமத்துவம், கௌரவம் மற்றும் நீதிக்கான போராட்டத்துக்காக அவர் தனது முழு வாழ்வையும் அர்ப்பணித்திருந்தார். அவரது குடும்பத்தினருக்கும் அபிமானிகளுக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்."

**********************

கொழும்பு
01 ஜூலை, 2024